துப்பாக்கிச் சூடு தொடர்பாக விசாரணை நடத்த பத்மநாபபுரம் கோட்டாட்சியர் பணிக்கப்பட்டுள்ளார். அவரது விசாரணை அறிக்கை கிடைத்த பின்பு தகுந்த நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நண்பகல் 12—00

மேலும், முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் திரு. சி. என். ராமதாஸ் அவர்களை அப்பகுதிக்குச் சென்று பார்வையிட்டு, அறிக்கை அனுப்பும்படி ஆணையிட்டிருந்தேன். அவர் பரிந்துரைகளுடன் தன்னுடைய அறிக்கையை அனுப்பியுள்ளார். மீனவர்களுக்கும், அரையர்களுக்கும் இடையே தேங்காய் மட்டைகள் ஊற வைப்பதில் எழுந்தப் பிரச்சினைக்கு ஒரு சுமுகமான தீர்வு காண இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. விரைவில் இதற்குரிய முடிவுகளை அரசு அறிவிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், இந்த அசம்பாவிதத்தால் மரணம் அடைந்த சிங்காரம் என்ற மீனவர் குடும்பம் வறுமையில் வாடக்கூடாது என்பதற்காக அவருடைய குடும்பத்திற்கு 50 ஆயிரம் ரூபாயை முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து உதவித் தொகையாக வழங்கி (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கெனவே ஆணை பிறப்பித்துள்ளேன் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல, திரு சி. என். ராமதாஸ் அவர்கள் கொடுத்த அறிக்கை அரசின் பரிசீலனையில் இருக்கிறது. இந்தப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண அரசு எல்லா நடவடிக்கையும் மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பிரச்சினை இத்துடன் முடிக்கப்படுகிறது.

4. கவன ஈர்ப்பு.

பரமக்குடி-எமனேஸ்வரம் பகுதியிலுள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் தேங்கியிருக்கும் கைத்தறித் துணிகளை கோ-ஆப்டெக்ஸ் வாங்க வேண்டிய அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து கவன ஈர்ப்பு. டாக்டர் எஸ். சுந்தரராஜ் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். டாக்டர் எஸ். சுந்தரராஜ்.

[1993 அக்டோபர் 28

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''பரமக்குடி-எமனேஸ்வரம் பகுதியில் தேங்கியிருக்கும் கைத்தறி துணிகளை கோ-ஆப்டெக்ஸ் வாங்க வேண்டியது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவையின்முன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி-எமனேஸ்வரம் பகுதியில் 35 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும், அவைகளில் சுமார் 10,000 கைத்தறிகளும் உள்ளன. இச்சங்கங்கள் காலத்திற்கேற்ப நவீன ரக விற்பனையாகக்கூடிய ரகங்களை உற்பத்தி செய்ய அறிவுறுத்தப்பட்டும், செயற்கை பட்டு மற்றும் பருத்தி நூலினால் ஆன, வெளி மாநிலங்களில் மட்டுமே விற்பனை ஆகக்கூடியதும், காலங்காலமாக உற்பத்தி செய்து வந்துள்ளதுமான ''பனாரஸ் ரக'' ஜவுளிகளையே உற்பத்தி செய்து வருகின்றன. இச்சங்கங்களில் 30—9—1993இல் சுமார் 90,000 சேலைகள் ரூ. 3.00 கோடி மதிப்பு அளவில், இருப்பில் இருந்தது. இது, இச்சங்கங்களின் சுமார் மூன்று மாத உற்பத்திக்குச் சமமாகும். அதில், கோ-ஆப்டெக்ஸ் ரூ. 75.00 இலட்சம் அளவிற்கு கொள்முதல் செய்துள்ளது. தவிர, இச்சங்கங்களின் நிர்வாகப் பொறுப்பில் உள்ள தனி அலுவலர்கள் ரூ. 175.00 இலட்சம் அளவிற்கு அவர்களின் பொறுப்பிலேயே விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள சரக்கு இருப்பையும் வரும் அக்டோபர், நவம்பர் பண்டிகைக் காலங்களில் அரசு வழங்கும் 20 சதவீதத் தள்ளுபடி மான்ய சலுகையினை பயன்படுத்தி விற்பனை செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 30—9—1993 ஆம் தேதி வரை கிட்டத்தட்ட 90 ஆயிரம் சேலைகள், 3 கோடி ரூபாய்க்குத் தேங்கியிருப்பதாக அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த சரக்கில் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் 75 இலட்சம் ரூபாய்க்கு கொள்முதல் செய்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன் எங்கள் மக்கள் சார்பாக. நெசவாளர் மக்கள் நலன் கருதி கைத்தறி நெசவாளர் சங்கங்களில் அதிகமாக தேங்கியுள்ள காலங்களில், தேங்கியுள்ள துணிகளுக்கான சிறப்புத் திட்டத்தின்கீழ் கோவாப்டெக்ஸ் கொள்முதல் செய்வதற்கு அரசிடம் திட்டம் ஏதும் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம், பரமக்குடி, எமனேஸ்வரம் பகுதிகளில் 35 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் ஏறத்தாழ 10 ஆயிரம் நெசவாளர்கள் கைத்தறித் துணிகளை உற்பத்தி செய்து வருகிறார்கள். அவர்கள் உற்பத்தி செய்கிற துணிகள் அனைத்துமே பனாரஸ் ரக துணிகள். இப்படி உற்பத்தி செய்யப்படுகிற துணிகள் எல்லாம் தமிழகத்திலுள்ள மக்களுக்கு அல்லாமல் பிற மாநில மக்கள் விரும்பத்தக்க ஒன்றாக அவர்கள் தயாரித்து வருகிறார்கள். தற்பொழுது கோவாப்டெக்ஸ் வாயிலாக 75 இலட்சம் ரூபாய் அளவுக்கு கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. இதைத் தவிர சங்கங்களின் தனி அதிகாரிகள் 175 இலட்சம் ரூபாய் அளவுக்குக் கொள்முதல் செய்து, அவைகளை சந்தையில் விற்பதற்கான வழிவகைகளும் செய்யப்பட்டிருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், கோவாப்டெக்ஸ் கொள்முதல் பணியாளர்களை இச்சங்கங்களுக்கு அனுப்பி, தேங்கியுள்ள சரக்குகளை தீபாவளி மற்றும் பண்டிகைகளை முன்னிட்டு கொள்முதல் செய்து விற்பதற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்காலங்களில் கைத்தறித் துணிகள் தேங்காமல் விற்பனை ஆவதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை என்பதை அமைச்சர் அவர்களின் மூலமாக அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 12—05

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சங்கங்களில் உற்பத்தி செய்யப்படுகிற பனாரஸ் ரக சேலைகள் நம்முடைய மாநிலத்தில் அதிகமாக விற்பதில்லை. இதற்காக கைத்தறித் துறையின் சார்பாக புரட்சித் தலைவி அவர்கள் இந்த சரக்குகளின் இருப்பு தேக்கத்தை குறைக்கும் பொருட்டு 15 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் பனாரஸ் ரக சேலைகளுக்குப் பதிலாக தற்போது பருத்தி மற்றும் சில்கோ ரக சேலைகளை உற்பத்தி செய்ய வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல், ஜனதா ரகத்தின் கீழ் மீதி கூட்டுறவுச் சங்கங்களும் உற்பத்தி செய்ய வேண்டுமென்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த சேலைகளை எல்லாம் பிற மாநிலங்களில் எல்லாம் விற்பனை செய்வதற்காக சில்க் சாரீஸ் கண்காட்சிகளுக்கு ஆங்காங்கே ஏற்பாடுகள் செய்யப்பட்டு விற்பனை செய்யவேண்டும். சில்க், காட்டன் சேரீஸ் எக்சிபிஷன் என்ற பெயரில் எக்சிபிஷன்களை ஏற்பாடு செய்து, விற்பனை செய்தால் அந்த நெசவாளர்களின் வாட்டத்தைப் போக்குவதற்கு சாலச் சிறந்ததாக இருக்குமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி

அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். மேலும், நெசவாளர்களுடைய வாட்டத்தைப் போக்க வேண்டுமென்பதற்காகத்தான் புரட்சித் தலைவி அவர்கள் பல்வேறு புரட்சிகரமான திட்டங்களை உருவாக்கி, ஜனதா ரகத் துணிகளை உற்பத்தி செய்வதற்கு திட்டங்களை வகுத்து வருகிறார்கள். சில அரசியல்வாதிகள் அதற்குள்ளே நுழைந்துகொண்டு, நெசவாளர்களுடைய நலன்களைக் கருதாமல், கூலி உயர்வு என்று சொல்லி, போராட்டங்களை உண்டாக்கிக் கொண்டிருக்கிறார்களே தவிர, நெசவாளர்களுக்கு நன்மை செய்வதாக இல்லை என்பதை நான் வருத்தத்தோடு இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுப்பினர் கேட்ட கேள்விக்கு மாத்திரம் பதில் சொன்னால் போதும்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: இந்தத் துறையைப் பொறுத்த அளவில் நெசவாளர்களின் வாட்டத்தைப் போக்குவதற்காக பல்வேறு நடவடிக்கைகளை அரசு எடுத்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. விதி 110-ன் கீழ் வேளாண்மைத்துறை அமைச்சரின் அறிக்கை

கரும்பு விவசாயிகளுக்குக் கூடுதல் விலை அளித்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110-ன்கீழ் பேரவைக்கு ஒரு முக்கிய அறிக்கையை அளிக்க மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோரி இருக்கிறார்கள். அவருக்கு அனுமதி வழங்கி இருக்கிறேன். இப்போது பேரவை விதி 110-ன்கீழ் அந்த அறிவிப்பினைப் பேரவைக்கு அளிப்பார்கள்.

*மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற விதி 110-ன்கீழ் கூட்டுறவு மற்றும் பொதுத் துறையைச் சார்ந்த சர்க்கரை ஆலைகளுக்கு 1992—93ஆம் ஆண்டில் கரும்பு அளித்த விவசாயிகளுக்கு கூடுதல் கரும்பு விலை அளிப்பது பற்றிய அறிக்கை ஒன்றைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் ஆணைப்படி, 1992—93ஆம் ஆண்டில் கரும்பு அளித்த பதிவு பெற்ற விவசாயிகளுக்கு ஏற்கெனவே அரசு அறிவித்த மாநில அரசின் பரிந்துரை விலைக்கு மேலாக கீழ்க்கண்டவாறு கூடுதல் கரும்பு விலை அளிக்க, கீழ்க்காணும் கூட்டுறவு மற்றும் பொதுத் துறையைச் சார்ந்த சர்க்கரை ஆலைகளுக்கு அரசு ஆணை வழங்கியுள்ளது.